# முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்
# O.S. No. 216 / 2024

**<u>வா.சா.1 / சுந்தராம்பாள் / 20.06.2025</u>**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

என் அப்பாவின் பூர்விக ஊர் இடுவாய் கிராமம் என்றால் சரிதான். அவருக்கு விவசாயம் தான் தொழிலாக இருந்தது என்றால் சரிதான். அவருக்கு பாத்தியப்பட்ட பூமியில் என் அப்பா அவராக விவசாயம் செய்து வந்தார் என்றால் சரிதான். என் அப்பாவுடன் பிறந்தவர்கள் மொத்தம் 3 பேர்கள். தாவா சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஆகவே, தாவா சொத்துக்களை என் அப்பா பிதுராஜித சொத்துக்களாக அவர் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். என் அப்பாவுடன் பிறந்தவர்கள் உடன் சேர்ந்து பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். 11.08.2006 ம் தேதி அவ்வாறு பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள். அவ்வாறு நடந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் உடனிருந்தேன். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் என் அப்பாவுக்கு எந்த அயிட்ட சொத்து அதில் ஒதுக்கப்பட்டது என்று கேட்டால் 'A' அயிட்ட சொத்து ஒதுக்கப்பட்டது. அதுதவிர அந்த பத்திரத்தில் வேறு ஏதாவது ஒரு சொத்து என் அப்பாவுக்கு ஒதுக்கப்பட்டதா என்றால் இல்லை. எங்கள் குடும்பத்திற்கு மேற்கண்டவாறு ஒதுக்கப்பட்ட சொத்தை தவிர வேறு சொத்துக்கள் இருந்ததா என்றால் இல்லை. ஒரு சொத்தை நான், எனது அப்பா, பிரதிவாதியான லெட்சுமி மற்றும் சிலர் சேர்ந்து கிரயம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். அவ்வாறு விற்கப்பட்ட சொத்து எங்களுக்கு எப்படி பாத்தியப்பட்டு இருந்தது என்பதை குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். அதுபோல கருப்புசாமி என்பவருக்கும் வேறு ஒரு சொத்தை கிரயம் செய்து கொடுத்தோம் என்றால் சரிதான். அவ்வாறு விற்கப்பட்ட சொத்து எங்களுக்கு எந்த ஆவணததில் அடிப்படையில் பாத்தியப்பட்டு இருந்தது என்பதை குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரியல்ல, என் தாத்தா மாரப்பகவுண்டர் கிரயம் வாங்கிய சொத்தாகும். அவ்வாறு மாரப்ப கவுண்டருக்கு எந்த தேதி, மாதம், வருடம் பத்திரத்தின் அடிப்படையில் பாத்தியப்பட்டது என்பதை குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். ஆனால், அதற்குண்டான ஆவணம் வீட்டில் உள்ளது அதை பார்த்தால் சொல்ல முடியும்.

மேற்கண்டவாறு பத்மநாபன் மற்றும் கருப்பசாமிக்கு விற்ற வகையில் கிடைத்த கிரயத் தொகை முழுவதையும் என் அப்பாவிடம் இருந்து வாங்கி கொண்டேனா என்றால் முழுவதுமாக வாங்கவில்லை சரிபாதி பாகத்தை கொடுத்தார். அவ்வாறு கிரயத்தொகையில் பாகம் பிரிப்பதில் எனக்கும் என் அப்பாவுக்கும் கருத்து வேறுபாடு இருந்தது என்றால் சரியல்ல. அவர் என் வீட்டில் தான் என் பராமரிப்பில் தான் இருந்தார். அவ்வாறு அவர் என் வீட்டில் எனது பராமரிப்பில் தான் இருந்தார் என்பதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் சாட்சிகள் உள்ளார்கள். திருமணம் ஆனது முதல் நான் பெருமாநல்லூரில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் வசித்து வரும் பெருமாநல்லுருக்கும் எனது தந்தை வசித்து வந்த இடுவாய் கிராமத்திற்கும் இடையே சுமார் 35 கி.மீ இடைவெளி இருக்கும் என்று சொன்னால் சரிதான். என் அப்பா எனது பராமரிப்பில் என் வீட்டில் ஒருபோதும் இருந்ததில்லை என்றால் சரியல்ல. மேற்கண்டவாறு பத்மநாபனுக்கு கிரயம் எழுதிக்கொடுத்த சொத்தை பொறுத்து 11.08.2006 ம் தேதியன்று ஏற்பட்ட மேற்படி பாகபத்திரத்தில் கண்டுள்ளது என்றும் அந்த பாகப்பிரிவினை பற்றி எனக்கு தெரியாததால் தான் அந்த சொத்து அதில் குறிப்பிடப்பட்டுள்ளது கூட எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. 11.08.2006 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் என் வசம் இல்லை. 2015 ம் ஆண்டு என் அப்பாவிற்கு லோட்டஸ் மருத்துவமனையில் கண் அறுவை சிகிச்சை நடந்தது என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் கண் அறுவை சிகிச்சைக்கு முன்பும் பின்பும் பிரதிவாதி வீட்டில் தான் என் அப்பா தங்கியிருந்தார் என்றால் சரிதான். எங்கள் வீட்டிலும் வந்து வசித்து வந்தார். அவ்வாறு கண் அறுவை சிகிச்சை எடுத்துக்கொண்டபோது என் அப்பாவை பிரதிவாதி வீட்டில் சென்று பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால், மருத்துவமனையில் வைத்து பார்த்தேன். அவ்வாறு சொல்வது தவறு என்றும் நான் மருத்துவமனைக்கு கூட சென்று அவரை பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்டவாறு பத்மநாபனுக்கு கிரயம் எழுதிக்கொடுத்து பெற்ற கிரயத்தொகையை பிரதிவாதியின் மகளின் திருமண செலவிற்கு கொடுக்கப்பட்டதாக நான் சொல்வது உண்மைக்கு மாறானது என்றால் சரிதான். அந்த தொகை முழுவதையும் நான் தான் பெற்று கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. என்

அப்பா நல்ல உடல்நிலையில் இருந்த சமயம் கடந்த 15.10.2020ம் தேதி ஒரு உயில் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அப்போது அவர் அந்த காலகட்டத்தில் சுயநினைவு இல்லாமல் இருந்தார். அதேபோல் சுயபுத்தியும் இல்லாமல் இருந்தார். அந்த உயிலின்படி தாவா சொத்தில் என் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட 3ல் ஒரு பங்கை உயில் மூலம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பாவிற்கு ஆதார் அட்டை உண்டு. அதில் அவருடைய முகவரியாக பிரதிவாதியின் முகவரி தான் கண்டிருந்தது என்று சொன்னால் அது மோசடியாக இருக்கலாம். என் அப்பா பிரதிவாதி வீட்டில் வைத்து தான் காலாமானார் என்றால் சரிதான். அவருக்கு இறப்பு மற்றும வாரிசு சான்றிதழ் வாங்கினோம். அவைகளிலும் என் அப்பாவின் முகவரி பிரதிவாதியின் வீட்டின் முகவரியாக தான் கண்டுள்ளது என்றால் சரிதான். காரணம் என் அப்பா கடைசியில் பிரதிவாதி வீட்டில் இருந்ததால் அவ்வாறு வழங்கப்பட்டிருக்கலாம். என் அப்பா திடீரென்று காலமானார் என்றால் அக்கம்பக்கத்தினர் காலையில் அவர் உணவு அருந்தியதாகவும் அப்போது உடல்நலக்குறைவு ஏற்பட்டு திடீரென்று இறந்துவிட்டதாக சொல்லி கேள்விப்பட்டேன். அதனால் அவர் இறக்கும் வரை நல்ல உடல் மற்றும் மனநிலையில் தான் இருந்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. இறக்கும் வரை அவர் நல்லது கெட்டதுக்கும் குல தெய்வ கோவிலுக்கும் சென்று வந்தார் என்றால் நல்லது கெட்டதுக்கு அவர் போனதில்லை. ஆனால் குலதெய்வ கோவிலுக்கு சென்று வந்ததாக கேள்விப்பட்டேன். குலதெய்வ கோவிலுக்கு போகவேண்டும் என்று என் அப்பா சொல்லி வந்தார் என்றும் அதனால் தான் குலதெய்வ கோவிலுக்கு அழைத்து செல்லப்பட்டார் என்றால் சரிதான். என் அப்பா இறப்பதற்கு 10 நாட்களுக்கு முன்பாக கூட நான் அவரை பிரதிவாதி வீட்டில் வைத்து பார்த்த வந்தேன். அதற்கு முன்பாக 2 அல்லது ஒரு வாரத்திற்கு ஒரு முறை அவரை பிரதிவாதி வீட்டில் சென்று பார்த்து வந்துள்ளேன். அவரை பார்க்கும் போதெல்லாம் அவர் நன்றாக என்னுடன் பேசுவார் என்றால் சரிதான். நான் என் தந்தையை பார்த்ததும் கிடையாது அவரை கவனித்ததும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. அப்பா இறந்த பிறகு தாவா சொத்தில் நான் விவசாயம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். காரணம் பிரிக்கப்படாததால் விவசாயம் எதுவும் செய்யவில்லை. அவ்வப்போது சென்று பார்த்து வருவேன். என்

அப்பா இறந்து தாவா சொத்தை பாகம் பிரித்து கொள்ளலாம் என்று கேட்டேனா என்றால் அவர் இறந்து இரண்டு மாதம் கழித்து கேட்டேன். அவ்வாறு கேட்டதற்கு தாவா சொத்தை 3 ஆக பிரித்து அதில் ஒரு பாகம் எனக்கு கொடுக்கலாம் என்று பிரதிவாதி சொன்னாரா என்றால் இல்லை. மேற்கண்ட உயிலின்படி தாவா சொத்தின் 3 ல் இரண்டு பாகத்தில் அனுபவ சுவாதீனத்தில் பிரதிவாதி இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்டவாறு என் அப்பா ஒரு உயில் எழுதி பதிவு செய்யப்பட்டதை அவர் இறந்து 16 வது நாள் சடங்கின் போது எல்லோர் முன்னிலையிலும் தெரிவிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. ஆகவே, உயிலின் படி தாவா சொத்தை மூன்றாக பிரித்து அதில் ஒரு பாகத்தை எனக்கு கொடுப்பதில் பிரதிவாதிக்கு எந்த ஆட்சபேணையும் இல்லை என்று சொல்லி வந்தார் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா இறந்து இரண்டு வருடங்கள் கழித்து தான் எனது வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதுவரை பாகம் பிரித்து கொள்ளலாம் என்று பேச்சுவார்த்தை நடந்தது. உயில் எழுதி வைத்திருப்பதுள னக்கு தெரிந்ததால் தான் மேற்கண்டவாறு என் அப்பா இறந்து இரண்டு ஆண்டு கால தாமதமாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிறகு வாகராயர்பாளையத்தை சேர்ந்த திப்பீஸ்வரன் மூலமாக சுமூகமாக பாகம் பிரிப்பது சம்மந்தமாக பேச்சு வார்த்தை நடந்ததா என்றால் நான் போனேன். ஆனால் பிரதிவாதி வரவில்லை. அவ்வாறு அவர் பேசும் போதும் உயில் இருப்பதாக பிரதிவாதி சொல்வதாக என்னிடம் தெரிவித்தாரா என்றால் அதுபற்றி சொல்லவில்லை. திப்பீஸ்வரன் மூலமாக உயிலின் நகலை படித்து பார்த்தேன் என்றால் சரியல்ல. அதுபோக திருப்பூரில் உள்ள சுந்தர்ராஜ் என்பவர் மூலமாகவும் பேச்சுவார்த்தை நடந்தது என்றால் நான் அவரிடம் சொன்னேன். ஆனால் பேச்சுவார்த்தை நடக்கவில்லை. சுந்தர்ராஜனும் பிரதிவாதியிடம் தாவா சொத்தை பாகம் செய்து கொள்வது குறித்து பேசினார் என்றும் சொன்னால் பேசினார் ஆனால் பிரதிவாதி கொடுப்பதை தான் நான் வாங்கிக்கொள்ள வேண்டும் என்று சொன்னதாக கேள்விப்பட்டேன். 3 ல் 1 பாகம் எனக்கு கொடுப்பதில் எனக்கு உடன்பாடு இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்த பின்னும் பஞ்சாயத்து நடந்ததால் உடனடியாக இவ்வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால்

சரிதான். என் அப்பா எழுதி வைத்ததாக சொல்லப்படும் உயிலை நான் இன்றளவும் பார்த்ததில்லை. காரணம் அது மோசடியானது. நான் முதல் நிலை விசாரணையில் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் பத்தி எண்.11 ல் உயிலில் கண்டுள்ள வாசகங்களை குறித்து தெரிவித்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். ஆகவே, எனக்கு ஏற்கனவே உயிலில் கண்டுள்ள வாசகங்கள் தெரியும் என்று சொன்னால் சரியல்ல. 2018 ம் ஆண்டு என் அப்பா வலிப்பு நோய் ஏற்பட்டு கீழே விழுந்து சிகிச்சை பெற்று வந்தார் என்று நான் சொல்வது உண்மைக்கு மாறானது என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு சிகிச்சை பெற்றதற்கு ஆதரவாக மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் அவருக்கு உடல்நல குறைவு ஏற்படவில்லை என்றும் அதனால் தான் மருத்துவ ஆவணங்கள் எதுவும் அதற்கு ஆதரவாக தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவர் இறக்கும் வரை நல்ல மனநிலையில் தான் இருந்து வந்தார் என்றும் நான் வழக்கிற்காக அதை மறைத்து உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா நல்ல மனநிலையில் இருந்த போது தான் விருப்பப்பட்டு உயில் எழுதி பிரதிவாதி பெயரில் பதிவு செய்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பாவின் கடைசி காலகட்டத்தில் நான் அவரை பார்க்கவும் இல்லை, பராமரித்ததும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா இறந்த பிறகு அவர் எழுதி வைத்த உயில் அமலுக்கு வந்து அதனடிப்படையில் பிரதிவாதி தாவா சொத்தின் அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றும் ஆகவே இவ்வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> : இல்லை.**

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

NANJAPPAN GUNASEKARAN

Digitally signed by NANJAPPAN GUNASEKARAN
Date: 2025.06.20 19:50:25 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.